அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு கார்த்திகை–தை டிசம்பர் 2018 முரசு 12 ஒலி 138



**தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ் உள்ளே**

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் வந்தனம். உத்தர ஞான சிதம்பரம் என்று போற்றப்படும் வடலூர் பெருவெளியில் நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் நிறுவப்பட்ட சத்திய ஞானசபையில் ஞான நிறைவு நாளாம் தைப்பூச தினத்தன்று ஜோதி தரிசனப் பெருவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவானது **நிகழும் விளம்பி வருடம் தை திங்கள் 06ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (20.01.2019) கொடியேற்றத்துடன் துவங்கி, தை 07ஆம் நாள் திங்கட்கிழமை (21.01.2019) அன்று ஏழு திரை நீக்கி தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா** பல்வேறு ஆன்மீக சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. உலகம் முழுவதிலிருந்தும் சன்மார்க்க சாதுக்களும், ஞானிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள். இவ்வானந்த பெருவிழாவில் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மற்றும் நண்பர்களும் கலந்துகொண்டு தொண்டு செய்து, ஜோதி தரிசனம் கண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரின் திருவருளைப் பெற்று வாழ்வில் எல்லா வளங்களையும் தெய்வ ஆனந்தத்தை பருக வருகவென்று அன்புடன் அழைக்கின்றோம்.

ஜனவரி
**21**
2019

அவ்வமயம் நமது
திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக
வடலூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் அமைந்துள்ள
**TRM சாந்தி திருமண மண்டபத்திலும்**
வடலூர் சத்திய ஞானசபை ஆர்ச் ரோட்டில்
**அருட்ஜோதி அரங்க மேடை** அமைத்தும்

- திருவருட்பா அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- அன்னதானம்
- திருஅருட்பா இசை நிகழ்ச்சி
- திருவருட்பா இலவச புத்தகம் வழங்குதல்

போன்ற சன்மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியைப் பொருளாகவோ, நிதியாகவோ அளித்து இப்புண்ணிய வைபவத்தில் பங்குகொள்ளலாம். தங்களின் நன்கொடைகளுக்கு 80G பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழ்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

**Bank:** HDFC Bank Ltd., **Name:** Arutperunjothi Vallalar Charitable Trust,
**A/c No.:** 08761450000048, **Branch:** Thiruvannamalai, **IFSC Code:** HDFC0000876

**தொடர்புக்கு: +91 8838540176, +91 9942776351**


## ஆறுகால ஜோதி தரிசன விபரம்

**நாள்: 21.01.2019 திங்கள்**
காலை 6.00, 10.00, மதியம் 1.00,
இரவு 7.00, 10.00
**மறுநாள்: 22.01.2019**
காலை 5:00



## சித்திவளாகத் திருவறை தரிசனம்

**நாள்: 23.01.2019 புதன்கிழமை**
இடம்: மேட்டுக்குப்பம்
நேரம்: பகல் 12.00 முதல்
மாலை 5.00 வரை



# திருச்செவிக்கு விண்ணப்பம்

### திருஅருட்பா பக்திப் பாமாலை

## திருப்பள்ளி எழுச்சி

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவசிவ போற்றி என்று உவகை கொள்கின்றார்
நினைப்புஅள்ளி உண்ணத் தெள்ளாரமுது அளிக்கும்
நேரம் இந்நேரம் என்று ஆரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றாது என்றனைக் கல்வி பயிற்றி
முழுதுணர்வித்து உடல் பழுதெலாம் தவிர்த்தே;
எனைப் பள்ளி எழுப்பிய அருட்பெருஞ்ஜோதி
என்அப்பனே பள்ளி எழுந்து அருள்வாயே.

## முறையிட்ட பத்து

அன்பின் உனது திருவடிக்கே ஆளாய்த்
தொண்டு ஒன்று ஆற்றாதே
துன்பின் உடையோர்பால் அணுகிச் சோர்ந்தேன்
இனி ஓர் துணைகாணேன்
என்பில் மலிந்த மாலைபுனை எம்மான்
தந்த பெம்மானே
முன்பின் நடுவாய் முளைத்தோனே
முறையோ முறையோ முறையேயோ.

## போற்றித் திருப்பதிகம்

நின்பதம் பாடல் வேண்டும்நான் போற்றி
நீறுபூத்து ஒளிர்குளிர் நெருப்பே
நின்புகழ் கேட்டல் வேண்டும்நான் போற்றி
நெற்றியங் கண்கொளும் நிறைவே
நின்வசமாதல் வேண்டும்நான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலையே
நின்பணி புரிதல் வேண்டும்நான் போற்றி
நெடுஞ்சடை முடித் தயாநிதியே.

..திருச்சிற்றம்பலம்..

# மனிதப் பிறப்பும் உத்தம வாழ்வும்

**தி**ருவொற்றியூர் சந்நிதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் நிர்வாணத் துறவி ஒருவர் நெடுநாளாகத் தங்கி இருந்தார்.

தெருவில் போவோர் வருவோரைப் பார்த்து, மாடு போகிறது, கழுதை போகிறது, நாய் போகிறது, நரி போகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வழியாகச் செல்வோர் அனைவருமே அவருக்கு மனிதராகத் தோன்றவில்லை. எல்லாருமே ஆடு மாடுகளாக, நாய் நரிகளாக, தேள் பாம்புகளாகத்தாம் தெரிந்தனர். உருவத்தால் மனிதர்களாக இருந்து உள்ளத்தால் – குணத்தால் மிருகங்களாக இருந்தால் அவர்களை என்னவென்று சொல்வது. சமுதாயத்திலே பிறரை முட்டுபவன் மாடு, கொட்டுபவன் தேள், உதைப்பவன் கழுதை, கடிப்பவனும் குலைப்பவனும் நாய், ஏமாற்றுபவன் நரி, சீறுபவன் பாம்பு. சித்தர் ஞானக் கோவையில் உள்ள சிவானந்த போதத்தில் ஒரு பாடலுண்டு.

**மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுண்டு**
**மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு**
**மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு**
**மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார் முன்னோர்.**

**மாவும் மாக்களும் ஐயறிவனவே என்கிறது தொல்காப்பியம்.**

மாவு – விலங்கு

மாக்கள் – மனித ரூபத்தில் இருந்தும் பண்படாத மக்கள்

இதனை நம் பெருமானாரும் உரைநடைப் பகுதியில் சத்திய சிறுவிண்ணப்பத்தில் "தாயினும் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான இருளில் அஞ்ஞான உருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்தில் பயின்று ஏதும் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையால் பவுதிக உடம்பில் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும், அதுகொண்டு அறிவே வடிவாய், அறிவே உருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அறிவாய், அறிவே அனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்து கொள்ளாது குற்றமே வடிவாய், குற்றமே உருவாய், குற்றமே பொறியாய், குற்றமே மனமாய், குற்றமே அறிவாய், குற்றமே அனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள்.." என்கிறார்.

மனிதப் பிறப்பு எடுத்தும் மனிதன் மனிதனாக வாழாது மிருகமாக வாழக் காரணம், இப்பிறப்பின் பெருமையையும், நோக்கத்தையும் அறியாததே.

“நாம் பல பிறவிகளையும் தப்பி மேலான இந்த மனிதப் பிறப்பு எடுத்தது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளைப் பெறுவதற்கே. எவ்வித முயற்சி செய்தாவது அந்த அருளைப் பெற வேண்டும்” என்பார் நம் பெருமானார்.

பலவேறு பிறவிகள் எடுத்து அதிலிருந்து தப்பித்த பின்னரே பெறுதற்கரிய இம்மனித தேகம் கிடைத்தது என்பதை இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இக்கருத்தையும் சத்திய சிறுவிண்ணப்பத்தில் பின்வருமாறு அருளுகின்றார் நம் வள்ளல் பெருந்தகை.

“அஞ்ஞான இருளில் ஒன்றும் தெரியாது உணர்ச்சி இன்றிக் கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே இவ்வுலகினிடத்து புல், நெல், மரம், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தாவரயோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று அலுப்படைந்தேம்.

பின்னர் எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும் தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கலம் முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்வூர்வன நீர்வாழ்வன வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.

பின்னர் ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப்புண்டல் முதலிய பலவேறு அவத்தைகளால் இறந்து இறந்து அப்பறவையோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.

பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல், அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்விலங்குயோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.

*பின்னர் பைசாசர், பூதர், ராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைபடுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தேவயோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.*

*பின்னர் காட்டகத்தார், கரவு செய்வார், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல், சிறைபடல், சிதைபடல் முதலிய அவத்தைகளால் இறந்து இறந்து அந்நரகயோனி வர்க்கங்கள் எல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.*

*அங்ஙனம் அப்பிறவிகள்தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமும் களைப்பும் துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயர் அறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றும் தெரிந்தோமில்லை"*

*அப்பப்பா! எத்தனை எத்தனை பிறவிகள், எத்தனை எத்தனை துன்பங்கள். இவ்விதம் விளக்கிய நம் பெருமானார், "இம்மனித தேகத்தில் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும், சிசுப் பருவத்திலும், குமாரப் பருவத்திலும் பலவேறு அவத்தைகளால் அறிவின்றி இருந்தோமாகலில், தேவரீர் பெருங்கருணைத் திறத்தை அறிந்து கொள்ளாமல் வீண்போது கழித்தோம்" என இம்மனித தேகம் எடுத்தும் நாம் இறைவனை உணராது வீண்போது கழிக்கின்றோம் என்கிறார்.*

*இறைவன் யார்? அவர் எத்தன்மையவர்? அவர்தம் கருணை எத்தகையது? இவ்வினாக்களுக்கும் நம் பெருமானார் சத்திய சிறுவிண்ணப்பத்திலேயே விடை பகருகின்றார்.*

*இயற்கை உண்மையர் என்றும், இயற்கை அறிவினர் என்றும், இயற்கை இன்பினர் என்றும், நிர்க்குணர் என்றும், சிற்குணர் என்றும், நித்தியர் என்றும், சத்தியர் என்றும், ஏகர் என்றும், அநேகர் என்றும், ஆதியர் என்றும், அனாதியர் என்றும், அமலர் என்றும், அருட்பெருஞ்ஜோதியர் என்றும், அற்புதர் என்றும், நிரதிசயர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும், எல்லாம் உடையவர் என்றும், எல்லாம் வல்லவர் என்றும் குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும் பதி.*

மேலும், எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர்களும் அறிந்து கொள்ளுதற்கு மிகவும் அரியதாய், எல்லாத் தத்துவ தத்துவிகளுக்கும் அப்பால் அப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறுதும் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதியர்.

**பேராய அண்டங்கள் பலவும் பிண்ட**

**பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்**

**வாராய பலபொருளும் கடலும் மண்ணும்**

**மலையளவும் கடலளவும் மணலும் வானும்**

**ஊராத வான்மீனும் அணுவும் மற்றை**

**உள்ளனவும் அளந்திடலாம் ஓகோ உன்னை**

**ஆராலும் அளப்பரிது என்று அனந்த வேதம்**

**அறைந்து இளைக்க அதிதூரமாகும் தேவே.** என்றும் திருஅருட்பாவில் அருளியுள்ளார்.

இஃதன்றி, "எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருட்களையும் மற்றை எல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கம் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள்" எனவும் அருள்கின்றார்.

**ஐந்தொழி லாதிசெய் ஐவரா திகளை**

**ஐந்தொழி லாதிசெய் அருட்பெருஞ்ஜோதி** என்பது அகவல் வரி.

அதாவது படைத்தல், காத்தல், துரிசுநீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், அருளல் என்ற ஐந்தொழிலை ஆற்றக்கூடிய பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்ற ஐந்தொழில் கர்த்தாக்களை படைத்தும், காத்தும், அவர்களது துரிசுகளை நீக்கியும், அவர்களுக்கு பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் அருளாட்சி செய்பவர் அருட்பெருஞ்ஜோதி இறைவன் ஆவார்.

இங்ஙனம் சர்வ வல்லமை பொருந்திய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் கருணைத் தன்மை எத்தகையது என்பதையும் காண்போம்.

"எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கும் என்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும்

எவ்வளவும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைதல் கூடுமென்றும் எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தியருளப் பெற்றோம்.

அவ்வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கி கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாள் அடைவோம்? மரணம், பிணி, மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்றும் அழியாத பேரின்ப சித்தி எக்காலம் கிடைக்கும்? என்று எண்ணி எண்ணி வழிதுறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே களைப்பறிந்து உதவும் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் 'நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளினின்றும் நீக்கி களைப்பும் கலக்கமும் தவிர்த்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடம் செய்வோம்' என்றும் 'அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருணம்' என்றும் 'அப்பதியினிடத்தே யாம் அருள்நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டும்' என்றும் திருவருட் குறிப்பால் அறிவித்ததுமன்றி, அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதோர் தடைகளுமின்றி அத்திருஞானசபையும் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங் களிப்படைகின்றோம்" என நம் பெருமானார் அருளியுள்ளார்.

இறைவன் எத்தகைய வல்லமை பொருந்தியவராக இருந்தாலும், எல்லாவற்றையும் கடந்து யாராலும் கண்டு கொள்வதற்கு அரிதாய் விளங்கினாலும் உண்மையான அன்போடு அவரை அழைத்தால் எளியோர்க்கும் எளியோனாய் வந்து அருள் செய்வார் என்பது புலனாகிறது. ஆனால் அதிலும் ஒரு சூட்சுமம் உண்டு.

**வருவார் அழைத்து வாடி வடலூர் வட திசைக்கே**
**வந்தால் பெறலாம் நல்ல வரமே**

**நவையிலா உளத்தில் நாடிய நாடிய**
**அவையெலாம் அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி**

இத்திருவருட்பா வரிகளை உற்று நோக்கும்போது அவ்உண்மை நமக்கு விளங்கும். அதாவது, குற்றமற்ற உள்ளத்தோடும், உண்மையான அன்போடும் நாம் இறைவனிடம் பிரார்த்தனை செய்தால் உடனே அவர் அருள் செய்வார் என்பதாம்.

இதற்கு நம் வள்ளல் பெருமானின் மேற்கண்ட இவ்வனுபவ வரிகளே சான்று.

**குற்றமற்ற உள்ளம் என்பதற்கு இலக்கணம் என்ன?**

எந்த உள்ளம் சாதி, சமயத்தின் பெயரால் உயிர்களிடத்தில் பேதம் பாராது இருக்கிறதோ, காமக் குரோதாதிகள் (விருப்பு வெறுப்பு) நேரிடும் காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்கிறதோ, கொலை புலை தவிர்க்கிறதோ அந்த உள்ளமே குற்றமற்ற உள்ளம். ஏனென்றால், இவையனைத்தும் இறைவனது அருளைப் பெறுவதற்குத் தடையாம்.

மேலும், திருவருட்பாவில் **பராபரன் உண்மை நிலையம்** என்ற தலைப்பில் நம் வள்ளல் பெருமானார் அருளியதாவது,

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்முயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்து உரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர் அவர் உளம்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம் எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திடஎன்**
**சிந்தை மிக விழைந்த தாலோ**

அதாவது, எள்முனை அளவுகூட உயிர்களிடத்தில் பேதம் பாராது தன்னுயிராய் நினைத்து வாழும் உள்ளம்தான் இறைவன் வாழும் ஆலயம் என்கிறார். அத்தகையோர் பிரார்த்தனை உடனே நிறைவேறும்.

ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாக்கிற்கு இணங்க, உயிர்க்குலம் ஒன்று எனவும், நமையாளும் இறைவனும் ஒருவரே அவர் அருட்பெருஞ்ஜோதியராய் விளங்கும் தனித்தலைமைப் பெரும்பதி எனவும் உணர்ந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுடன் ஜீவர்களிடத்தில் தயவும், ஆண்டவரிடத்தில் அன்பும் கொண்டு வாழ்ந்தால் நாம் இந்த பிறப்பினால் பெறவேண்டிய பெரிய லாபத்தை பெற்றுக் கொள்ளலாம் என்பது திண்ணம். **மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார் முன்னோர்** என்ற வரிகளை நினைவில் கொள்க.

**"உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம் பரவுக! உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெலாம் விலக நீ அடைந்து விலக்குக மகிழ்க! சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக! உத்தமன் ஆகுக ஓங்குக!" – வள்ளலார்**

## மூத்தோர்சொல் அமிர்தம்

**பூ**லோகத்தில் ஒரே தெருவைச் சேர்ந்த ஒரு செருப்பு விற்கும் தொழிலாளியும், ஒரு செல்வந்தரும் இருந்தனர். செருப்புத் தொழிலாளி தினமும் தனது கடையின் ஓரத்தில் பெருமாள் படம் ஒன்றை வைத்து அதை தினமும் வணங்கி வந்தான்.

அவனிடம் செல்வம் இல்லாவிட்டாலும் சந்தோஷமும், மன அமைதியும் இருந்தது. செல்வந்தரோ தினமும் காலையில் குளித்துவிட்டு பலமணி நேரம் பூஜை புனஸ்காரம் செய்வார். அவருக்கு பல தலைமுறைக்கு செல்வம் இருந்தும் நிம்மதியின்றி வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் நாரத மாமுனிவர் விஷ்ணுவைப் பார்த்து "பெருமாளே! அந்தச் செல்வந்தர் மிகுந்த பக்திமானாக தினமும் உங்களுக்கு பூஜை செய்து வருகிறார். அவருக்கு நிம்மதியைத் தரக்கூடாதா" என்றார்.

விஷ்ணுவும் அதற்குச் சம்மதித்து நாரதரை பூலோகத்திற்கு அனுப்பினார். போகும்போது நாரதரிடம் "நாரதரே! நீங்கள் கீழே சென்று நான் நாராயணனிடமிருந்து வருகிறேன் என்று செல்வந்தரிடம் சொல்லுங்கள். பின்னர் அவர் தற்பொழுது நாராயணன் என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்று கேட்பார். அதற்கு நீங்கள் நாராயணன் தற்போது ஓர் ஊசியின் காது வழியாக யானையை நுழைத்துக் கொண்டிருக்கிறார் என்று பதில் சொல்லுங்கள். அப்படியே செருப்பு தைக்கும் தொழிலாளியையும் பார்த்துவிட்டு வந்துவிடுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

நாரதரும் முதலில் அந்தச் செல்வந்தரின் வீட்டிற்குச் சென்றார். பூஜை எல்லாம் முடித்துவிட்டு வந்த செல்வந்தர் நாரதரிடம், "நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்க நாரதர், "பக்தனே நான்தான் நாரதர். நான் நாராயணரிடமிருந்து வருகிறேன்" என்றார்.

அதற்கு அந்தச் செல்வந்தர், "தற்போது நாராயணன் என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்க நாரதரும், "நாராயணன் ஓர் ஊசியின் காதுவழியாக யானையை நுழைத்துக் கொண்டு இருப்பதை பார்த்தேன்" என்றார்.

அதற்கு அந்த செல்வந்தரோ, "அது எப்படி முடியும். இது என்ன நடக்கிற காரியமா?" என்று கேட்டார்.

*நாரதர் அடுத்து செருப்புத் தொழிலாளியைப் பார்க்கச் சென்றார். அவரிடமும் இதே சம்பாஷணை நடைபெற்றது. ஆனால் அந்த செருப்பு தைக்கும் தொழிலாளி, "இதில் என்ன விந்தை இருக்கிறது. ஒரு பெரிய ஆலமரத்தை சின்ன விதையில் அடக்கியவர், பிரபஞ்சத்தை தன் வாயில் காண்பித்தவர், அவருக்கு யானையை ஊசியின் காதுக்குள் நுழைப்பது என்ன பெரிய விஷயமா" என்று பதில் சொன்னார்.*

*அவர்கள் இருவரும் சொன்ன பதிலை நாராயணனிடம் வந்து சொன்னார் நாரதர்.*

*இப்போது நாராயணன் நாரதரிடம், "நாரதரே! கடவுள் பக்தி என்பது பூஜை புனஸ்காரங்கள் செய்வது மட்டுமல்ல. இறைவனின் பாதத்தை பூரண நம்பிக்கையுடன் நீயே சரணம் என்று பற்றுவதே உண்மையான பக்தி. இப்பொழுது தெரிகிறதா, ஏழையின் நிம்மதிக்கு காரணம் என்னவென்று" என பதிலளித்தார்.*

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

**– சுவாமி விபுலானந்தர்.**

நம்மைப் பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடிப் பங்கு நம்மீது தயவுள்ளவர் நமது ஆண்டவர். ஆகலால் ஒருகாலத்திலும் குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனால் நாம் நம்பிக்கை தவறாது இருக்க வேண்டும். **– வள்ளலார்.**

---

*ஒரு ஊரில் துறவி மடம் ஒன்று இருந்தது. அங்கு அமைதியையே பின்பற்ற வேண்டும். துறவிகள் யாரும் பேசவே கூடாது. ஆனால் அங்குள்ள துறவிகள் பத்து வருடத்திற்கு ஒருமுறை மட்டும் பேசலாம். அதுவும் இரண்டு வார்த்தைகள் மட்டுமே பேசலாம். அப்போது அங்கு பத்து வருடங்கள் தங்கிய பிறகு துறவி ஒருவர் குருவிடம் சென்றார்.*

*குரு, "பத்து வருடம் ஆகிறது. நீ பேச நினைக்கும் இரண்டு வார்த்தைகள் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த துறவி, "மெத்தை.. கடினம்" என்றார். அதற்கு குரு, "அப்படியா!" என்று கேட்டார்.*

*மீண்டும் பத்து வருடம் கழித்து குருவிடம் சென்றார். "பத்து வருடம் ஆகிறது, நீ பேச நினைக்கும் இரண்டு வார்த்தைகள் என்ன?" என்று குரு மறுபடியும் கேட்டார்.*

*அதற்கு துறவியோ, "உணவு.. நாற்றம்" என்று கூறினார். அதற்கு குரு, "அப்படியா!" எனக் கேட்டுக் கொண்டார்.*

*அந்த துறவி மறுபடியும் பத்து வருடத்திற்குப் பிறகு குருவைப் பார்க்கப் போனார். குருவும், "இந்தப் பத்து வருடத்திற்கு நீ பேச நினைக்கும் இரண்டு வார்த்தைகள் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த துறவி, "நான் செல்கிறேன்" என்று சொன்னார். அதற்கு குரு, "எனக்கு ஏனென்று தெரியும். ஏனெனில் உனக்கு எப்போதும் குறை கூறுவதே வழக்கமாக இருந்தது. தான் கொண்ட கொள்கையில் இலட்சியமின்றி எதையும் குறை மனதோடு காண்பவன் எப்போதும் ஞானம் அடைய முடியாது" என்று சொன்னார்.*

தன்னை மதியாதிருத்தல் வேண்டும்.

பிறர் குற்றம் விசாரியாதிருத்தல் வேண்டும்.

தன் குற்றம் விசாரித்தல் வேண்டும். **– வள்ளலார்.**

**——திருச்சிற்றம்பலம்——**

## விருப்பு வெறுப்பு

**விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள்:**

*விருப்பென்பது யாதெனின் ஒன்றை வேண்டிப் பந்தப்பட்டு பூரண லக்ஷியத்தை விட்டு அதிசயமாகப் பார்த்து நிற்றல். இந்த விருப்பால் தானும் கெட்டு இதர வஸ்துவும் கெட்டு சாதனமும் தடைபட்டுவிடும். ஆதலால் எவ்வகையிலும் விருப்பென்பது கூடாது.*


*வெறுப்பென்பது யாதெனின், வேண்டாமை; துவேஷம்; இதர வஸ்துவைப் பற்றாதிருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்துவிடத்தில் துவேஷம் தோன்றி ஜீவ உபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்பும் கூடாது. மேற்குறித்த இரண்டும் அற்று சத்துவமயமாய் நிற்றல் வேண்டும்.* – வசனபாகம்.

**விருப்போடு இகல்உறு வெறுப்பும் தவிர்த்தே**
**அருட்பேறு அளித்த அருட்பெருஞ்ஜோதி – அகவல்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.






## தேடியதுண்டு நினது உரு உண்மை

**சு**ப்ரமணியம் என்பது நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணிப்பிரகாசம் பொருந்தியிருக்கின்றது. இந்த ஜோதி மணியை ஷண்முகம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்றிடம் தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கின்றது. இதைச் சுப்ரமணியம் என்று சொல்லுவார்கள். இந்த தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் ஷண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மணிக்கு அப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலையாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே **சுப்பிரமணியம்.**

**இரண்டு கால்** என்பது விஷயவுணர்ச்சி, நிர்விஷயவுணர்ச்சி. **கை பன்னிரண்டு** என்பது ஆறு ஆதாரங்களிலுள்ள பிரகாச அப்பிரகாசமாகிய பன்னிரண்டுமாம். வச்சிரம் என்பது தீக்ஷண்ய உணர்ச்சி; **வேல்** என்பது சத்தி, அருள், அறிவு; **மணி** என்பது ஆன்ம விளக்கமாகிய நாதம்; **த்வஜம்** என்பது கீர்த்தி; **ஸரஸிஜம்** என்பது தயவு; **குக்குடம்** என்பது மாச்சரியம் இல்லாத நிறைவு; **பராகம்** என்பது பாச நீக்கம்; **தண்டம்** என்பது வைராக்கிய அறிவு; **பாணம்** என்பது அன்பு; **அபயம்** என்பது சமாதான உணர்ச்சி; **வரதம்** என்பது நிராபாரமாகிய ஆதரமென்னும் சகிப்பு; **கடப்ப மாலை** என்பது சர்வ தத்துவ கண்டனம்; பல வர்ணமுள்ளதும், விசித்திர வடிவமானதும், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாய் உள்ளதுமான மூலப்பிரகிருதியே **மயில்.**

## Advertisement

# மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி



தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா 9842679999 / 9442327059

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Booke at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Ellte Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.


# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

## Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# உடம்பை வளர்க்கும் உபாயம்

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பை அறியாதவர் மடத்திற் புகுந்த நாய் போன்றவர் என்கிறார் திருமூலர்.

**உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி**
**உடம்பிடை நின்ற உயிரை அறியார்**
**உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார்**
**மடம்புகு நாய்போல் மயங்கு கின்றாரே — திருமந்திரம்.**

உடம்பின்றி உயிர் இயங்காது. உயிர் இன்றி உடம்பு இயங்காது. உடம்புக்கு உயிர் இன்றியமையாதது. உயிருக்கு உடம்பு இன்றியமையாதது. உடம்பும் உயிரும் ஒன்றி இருந்தால்தான் சிறப்பு.

**குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு — குறள்**

கூட்டை விட்டு பறவை பறந்து விடுவது போல உடம்பை விட்டு உயிர் பிரிந்து விடுகிறது. இதுவே உடம்புக்கும் உயிருக்குமான நட்பு என திருவள்ளுவர் கூறியது உலகியலை நோக்கிக் கூறிய பொது உண்மையே அன்றி அருளியலைக் கருதிக் கூறிய சிறப்புண்மை ஆகாது. உடம்பை விட்டு உயிர் பிரிந்து விடலாகாது.

இந்நுட்பத்தை நம் வள்ளல் பெருமான், "உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்" என்றவிடத்தில் குறிக்கிறார். உயிருறும் உடல் உடலுறும் உயிர் ஆகிய இரண்டுமே ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது காக்கப்பட வேண்டும்.

**உயிருறும் உடலையும் உடலுறும் உயிரையும்**
**அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி** என்கிறது அகவல்.

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிச் சிவத்திற் சேர்வதே சித்தி. இதனைத் திருமூலர்,

**உடலும் உயிரும் ஒழிவற ஒன்றில்**
**படரும் சிவசத்தி தாமே பரமாம்**
**உடலைவிட்டு இந்த உயிரெங்கும் ஆகிக்**
**கடையும் தலையும் கரக்கும் சிவத்தை** என்பார்.

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுவதே உண்மை நட்பு. இந்நட்பை உணர்ந்து உரிய சாதனங்களால் சுத்த, பிரணவ, ஞான தேகங்களைப் பெற்று முத்தி, சித்திகளை அடைய வேண்டும்.

இஃதுணராது உடம்பு பிணமாக விழ உயிர் முத்தியடையும் என்போர் மூடர். அத்தகைய மூடரை நோக்கியே தாயுமானவர்,

**உலகநெறிபோல் சடலம் ஓயஉயிர் முத்தி**

**இலகுமெனல் பந்த இயல்போ பராபரமே** எனக் கேட்கிறார்.

உரிய பக்குவம் உடையார்க்கு இறைவன் உயிரில் மட்டுமன்றி உடலிலும் புகுந்து கலந்து அருள் புரிகின்றார். பின்வரும் திருவருட்பா பாசுரம் இதற்குச் சான்று.

**வன்புகலந்து அறியாத மனத்தோர் தங்கள்**
**மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற**
**என்புகலந்து ஊன்கலந்து புலன்களோடும்**
**இந்திரியம் அவைகலந்து உள்இயங்குகின்ற**
**அன்புகலந்து அறிவுகலந்து உயிர் ஐம்பூதம்**
**ஆன்மாவும் கலந்துகலந்து அண்ணித்து ஊறி**
**இன்பு கலந்து அருள்கலந்து துளும்பிப் பொங்கி**
**எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே.**

நிற்க. உடலையும் மனதையும் பக்குவமாக வைத்துக் கொள்வோர்தம் உடம்பாதிகளோடுதான் கடவுள் கலக்கின்றார் என்பது கருத்து.

இனி உடலையும் மனதையும் வளர்க்கும் உபாயத்தைக் காண்போம்.

“ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூச்சியம் ஆகப்பெறுதல்” என்று நித்தியக் கருமச் சிறப்பு விதிகளை முடிக்கும் வள்ளல் பெருமான், உபதேசத்திலும் “நம்மை நஷ்டம் செய்வன நான்கு. அவையாவன ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம் ஆகிய இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்” என்று உபதேசிக்கிறார். இந்நான்குடன் சோம்பலும் கூடாதென்று கூறுகிறார். “சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்குப் பத்தியம் தூக்கம் சோம்பம் ஆகாது” என்பது பெருமான் உபதேசம்.

ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம், சோம்பல் ஆகிய இவ்வைந்தும் தத்துவம் தொண்ணூற்றாறில் பூதகாரியம் இருபத்தைந்தில் தேயுவின் (நெருப்பின்) காரியங்கள் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. இனி இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

உணவைக் குறித்து உரைநடைப்பகுதியில் வள்ளல் பெருமானின் உபதேசமொன்று பின்வருமாறு:

“இந்த உலகத்தில் மனிதர்களுக்குத் தேகம் சிக்கிரத்தில் நஷ்டம் அடைவதற்குக் காரணம் இரண்டு.

*அவையாவன: ஆகாரம், மைதுனம். ஆகாரத்தால் ஒன்பது பங்கு நஷ்டமும், மைதுனத்தால் ஒரு பங்கு நஷ்டமும் உண்டாகிறது. எப்படியெனில்: பிண்ட உற்பத்தியின் காலம் தொடங்கி இறந்துபோகிற பரியந்தம் ஆகாரம் உண்டு. இது இயற்கை. சிசு, வாலிபம், விருத்தாப்பியம் இந்தப் பருவங்களில் மைதுனம் கிடையாது. கௌமாரம், யௌவனம் இந்த இரண்டு பருவங்களில் மாத்திரம் மைதுனம் உண்டு. இந்தப் பருவங்களிலும் நோயாலும், தரித்திரத்தாலும், பசியாலும், பயத்தாலும் வேறு அநந்த வகையால் உண்டாகும் துன்பங்களாலும் மைதுனம் தடைபடும். இந்தக் காலத்திலும் ஆகாரம் உண்டு. பொருந்தல் ஏகதேசம். நஷ்டமும் அப்படியேயிருக்கிறது. ஆகார விஷயத்தில் அதிக்கிரமம் அக்கிரமம் அஜாக்கிரதை அசாதாரணம் இப்படிப்பட்ட உணவுகளை நீக்கி சுத்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து ஆயுள் விருத்தி செய்து கொள்வது சுத்த சன்மார்க்க ஏற்பாடு."*

சத்துவம், ராஜசம், தாமசம் என்னும் முக்குணப் பொருள்களில் சத்துவ குணப் பொருள்களால் ஆன உணவையே கொள்ள வேண்டும். சத்துவ குண உணவை உண்டால் மனம் சத்துவமயமாயிருக்கும்; உடம்பு சத்துவ உடம்பாயிருக்கும். ராஜச தாமச குண உணவை உண்டால் மனமும் உடலும் ரஜோ தமோ குணத்தையே பெற்றிருக்கும்.

புலால் உணவு தாமச குணமுடையது. புலால் உண்ணும் புறவினத்தார்க்கு திருவருள் கிட்டாது. அத்தகையோரை ஆண்டவர் பொருந்தமாட்டார். உடல் தூய்மையும், மனத் தூய்மையும் பெற விரும்புவோர் புலாலைக் கனவிலும் கருதலாகாது.

பால், தயிர், மோர், நெய் ஆகியவற்றையும் சுத்த சன்மார்க்க சாத்தியர்கள் கொள்ளப்படாது என்றும் சாதகர்கள் ஒருவாறு கொள்ளலாம் என்றும் பெருமான் விதித்திருக்கிறார்.

உப்பு, புளி, மிளகாய் இம்மூன்றும் உடலுக்குக் கேடு பயப்பவை. உப்பால் நரை, புளியால் திரை என்று சித்தர் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. காட்டில் புலி கொல்லும், வீட்டில் புளி கொல்லும் என்பது பழமொழி. உப்பைக் குறைவாகவே சேர்த்துக் கொள்ள வேண்டும். புளிக்குப் பதிலாக எலுமிச்சையையும், மிளகாய்க்குப் பதிலாக மிளகையும் கொள்ள வேண்டும்.

கையாந்தகரையும் (கரிசலாங்கண்ணி), தூதுளையும் ஞானப் பச்சிலைகள். இவற்றைப் பயன்படுத்துவதைப் பெருமான் மிகவும் வற்புறுத்துகிறார்.

குளிந்த நீர் கொள்ளலாகாது. வெந்நீராகவே கொள்ள வேண்டும் என்பதும் பெருமான் வற்புறுத்துவது. நித்திய ஒழுக்க விதியில் உணவைப் பற்றிக் கூறியவற்றை இங்கு நினைவு கூர்க. இப்படிப்பட்ட சத்துவ குண உணவைச் சாதகர்கள் நாளும் ஒருவேளையே கொள்ள வேண்டும். ஆசிரியர் இன்னார் எனத் தெரியாத நீதிவெண்பாவில்,

**ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே**

**இருபோது போகியே யென்ப – திரிபோது**

**ரோகியே நான்குபோது உண்பான் உடல்விட்டுப்**

**போகியே என்று புகல்** என ஒரு அழகான பாடலுண்டு.

அதாவது, ஒருவேளை உண்பவன் யோகி (தவம் செய்பவன்); இருவேளை உண்பவன் போகி (உலக இன்பங்களை அனுபவிப்பவன்); மூன்றுவேளை உண்பவன் ரோகி (நோயாளன்); நான்கு வேளை உண்பவன் உடல் விட்டுப் போகி (உடலை விட்டு இறந்து போகக் கூடியவன்) என்று கூறுகிறது.

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
**உண்டி சுருங்கில் உபாயம் பலவுள**
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே.

என உண்டி சுருங்கில் உபாயம் பலஉள என மேற்கண்ட திருமந்திரத்தில் திருமூலர் அருளியுள்ளார். ஏனென்றால், ஒருவனுக்குச் சோற்றிலே விருப்பம் உண்டானால் அவனுடைய தவமெல்லாம் ஆற்றிலே கரைத்த புளியைப் போலப் போகும் என்று பெருமான் அவர்கள் திருவருட்பாவில் கூறுவார்.

**சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடில் ஒருவன்**
**துன்னுநல் தவம் எலாம் சுருங்கி**
**ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்**

இனி பொருந்தல் என்பது பற்றிக் காண்போம். பொருந்தலாகிய புணர்ச்சி பற்றி உரைநடைப் பகுதியில் நம் பெருமானாரின் உபதேசம் பின்வருமாறு:

“சுத்த சன்மார்க்க லக்ஷிய அனுபவ விருப்பமுடையவர்களுக்கு நனவிலும் மண்ணாசை, கனவிலும் பெண்ணாசை, சுழுத்தியிலும் பொன்னாசை முதலிய மூன்றும் கூடாவாம்” என்பது வள்ளற் பெருமான் உபதேசம். கனவிலும் பெண்ணாசை கூடாது என்று கூறும் இலக்கணத்துக்கு அவரே இலக்கியமாக இருந்தார்.

'திலகவாள் நுதலார் தமைக் கனவிடத்தும் சிறிதும் நான் விழைந்திலேன்' என்பது அகச்சான்று.

பால் உண்ணும் குழவிப் பருவத்திலேயே பெண்ணாசையில் பெருமானுக்கு வெறுப்புண்டு. 'இதில் அருவருப்புப் பால் உணும் காலையே உளதால்' என்பது பெருமான் வாக்கு. பிள்ளைப் பருவம் முதலே இல்வாழ்வில் நாட்டமின்றி நின்ற பெருமான் பிறர் வற்புறுத்தலால் திருமணத்திற்கு இசைந்து ஒருத்தியைக் கைத்தொட நேர்ந்ததேனும் அவளோடு கலக்கவில்லை.

**தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்**
**ஒருத்தியைக் கைத்தொடச் சார்ந்தேன்**
**குனித்த மற்றவரைத் தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்....**

தொட்டாரே அன்றி கலக்கவில்லை. அதுமட்டோ, நினைத்த போதெல்லாம் உள்ளம் வருந்தினார். ஆயினும் பொருந்தல் இல்வாழ்வார்க்கு இவ்வாறென்றும், துறவறத்தார்க்கு இவ்வாறு என்றும் வள்ளற் பெருமான் பிரித்து உபதேசித்துள்ளார். இல்வாழ்வார் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை மாதரைப் பொருந்தலாம் என்றும், துறவிகள், சாதகர்கள், அதிதீவிர பக்குவிகள் ஆகியோர்க்குப் பொருந்தல் அறவே கூடாதென்றும் கூறியுள்ளார்.

இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகத்தில் "தேகத்தை ஜாக்கிரதையாக உபசரித்து வர வேண்டும். சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மிதபோசனம் மிதபோகம்.

மித போஜனமாவது கோபம், விராகம், அலக்ஷியம், முயற்சி, விரைவு இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல், விருந்து சுவைவிருப்ப முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் புசித்தலாம்.

மிதபோகமாவது அதிபரிச்சயம், அதிஞாபகம் முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்றாது பொருந்தல், விராகம், அலக்ஷிய முதலிய எதுக்களால் பொருந்தாதிருத்தல். இவை இரண்டுமின்றி மாதத்திரண்டு விசை மாதரைப் புல்குவது என்றபடி பொருந்தலாம். ஆதலின் இவ்வாறு நடத்த வேண்டும்" எனக் கூறுவது இல்லறத்தார்க்கு அறிவுரை. இவ்வறிவுரை உபதேசத்திலும் பலவிடங்களில் உள்ளது.

காம சிந்தனையால் விந்து கீழே இறங்கும். ஞான சிந்தனையால் விந்து மேலேறும். விந்து மேலேறுவதை ஊர்த்துவரேதஸ் என்பர். வள்ளல் பெருமானும் 'சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்கு பத்தியம் தூக்கம் சோம்பல் ஆகாது' என்கிறார். இந்த உபதேசத்தின் மூலம் சப்த தாதுக்களுள் சுக்கிலம் முக்கியமானது என்பது தெரிகிறது.

*மஜ்ஜை, இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்னும் ஏழு தாதுக்களில் எலும்பு மூலாதாரத்திற்கும், மூளை சுவாதிட்டானத்திற்கும், தசை மணிப்பூரகத்திற்கும், ரத்தம் அனாகதத்திற்கும், தோல் விசுத்திக்கும், மஜ்ஜை ஆக்ஞைக்கும், சுக்கிலம் சகஸ்ராரத்திற்கும் உரியன என்பார். உடம்பில் உற்பத்தியாகும் சுக்கிலத்தில் இரண்டரை வராகன் எடைக்கு ஒருவராகன் எடை கோச நுனியிலும், ஒருவராகன் எடை நாபியிலும், அரை வராகன் எடை பிரமரந்திரத்திலும் சேர்கிறதென்று பெருமானின் உபதேசமொன்று கூறுகிறது.*

*கோசத்திற் சேர்வது புணர்ச்சியில் வெளிப்பட்டுக் கருத்தரிக்கச் செய்கிறது. பிரமரந்திரத்திற் சேர்வது அமுதமாகிறது. 'சுக்கிலம் பந்தித்து ஒருதிரளாயிட' என்பது சுக்கிலம் மேலேறிய அனுபவம். கீழே சுக்கிலப் பையில் விந்து சேர்வது குறைந்து மேலே பிரமரந்திரத்தில் சேர்வது மிகுதிப்பட வேண்டும். அதற்கான சாதனைகளே சுக்கிலம் மேலேற்றும் சாதனைகளாம். ஆனால் மனதைக் கட்டியவரே விந்தைக கட்ட இயலும். மனதைக் கட்டாது விந்தைக் கட்ட முற்படின் நோயுண்டாகும். இது நூல் வழி உணரக்கூடியதன்று, குருவருளாலும் திருவருளாலும் கூடும் அனுபவங்களாம்.*

*இனி அனந்தல் எனப்படும் தூக்கம் குறித்து காண்போம். அனந்தலாடேல் என்பது ஆத்திசூடி. உறக்கத்தை சங்காரம் என்கிறார் திருமூலர்.*

**இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்**
**துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்**
**உறக்கத்தை நீக்கி உணர வால்லார்கட்கு**
**இறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே.**

*என்னும் திருமந்திரம் உறக்கத்தை நீக்கினோர் இறப்பு நீங்கி இருப்பு பெறுவர் என்பதைக் கூறுகிறது.*

**உறக்கம் உணர்வோடு உயிர்ப்பின்மை அற்றால்**
**பிறப்பன்றி வீடாம் பரம் – ஔவைக் குறள்**

*காலையில் மலங்கழித்தல், கடும்பகலில் பசி, நிசிவேளையில் நித்திரை, ஊர் ஊராக யாத்திரை செய்தல் ஆகியவற்றினின்று தப்பினேன் என்கிறார் மாணிக்கவாசகர்.*

**காலை மலமோடு, கடும்பகற் பசி, நிசி**
**வேலை நித்திரை, யாத்திரை பிழைத்தும்**

**தூக்கம் கெடுத்துச் சுகம் கொடுத்தான்; தூக்கம் தொலைத்தான் என்று ஊதூது சங்கே; தூங்காதே விழித்திருக்கும் சூதறிவித்து** என்பவை வள்ளற் பெருமானின் துயில் நீத்த அனுபவங்கள்.

பகலில் எந்த வகையிலும் நித்திரை ஆகாது. எந்தக் காலத்தில் எது குறித்து படுத்தபோதிலும் இடக்கைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும்.

ஆரம்ப சாதகர்கள் இரவு 12 மணிமுதல் 3 மணி வரை உறக்கம் செய்தல் வேண்டும்.

உடல் வளர்க்கும் உபாயத்தின் அடுத்த அங்கம் அச்சம் தவிர்த்தலும், சோம்பல் நீக்கலும்.

அச்சம் தவிர் என்கிறது ஆத்திசூடி. அச்சம் உள்ளத்தை மட்டும் தாக்குவதன்று உடலையும் தாக்கும். பயந்தாரிக் காய்ச்சல் ஒன்றே போதுமான எடுத்துக்காட்டு. எதையாவது கண்டு பயந்தால் உடம்பில் காய்ச்சல் உண்டாகிறதல்லவா. அக்காய்ச்சலைப் போக்க கொழுமோர் காய்ச்சிக் கொடுக்கிறோமல்லவா. ஆத்ம சாதனையில் இருக்கும் சாதகர்களுக்கு எதிலும் அச்சம் கூடாது.

**எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்**
**அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி**

**தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்**
**தொலைந்தன தொலைந்தன**

**கவலை இடர் பயமெல்லாம் என்னைவிட்டு ஒழிந்திடப் புரிந்தாய்**

என்பவை வள்ளற் பெருமான் அச்சம் நீத்த அனுபவங்கள்.

மேலும் "சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்" என்பது கொன்றை வேந்தன். திருவள்ளுவர் மடியின்மை என்றொரு அதிகாரமே செய்திருக்கிறார்.

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக்கலன்** என்னும் குறட்பாவை கருதுக.

தாமதம், மறதி, சோம்பல், அளவு மீறியத் தூக்கம் இவை நான்கும் அழிவை நாடுவோர் விரும்பி ஏறக்கூடிய சிறு படகாகும்.

**தியான மயமானால் பொசிப்பு மாறும்** என்ற வள்ளல் பெருமான் வாக்கிற்கிணங்க நித்திய ஒழுக்க விதியில் அருளியுள்ள காலங்களில் அருட்பெருஞ்ஜோதி இறைவனை தியானித்து வந்தால் ஆகாரம், நித்திரை, மைதுனம், பயம், சோம்பல் இவற்றை முறைப்படுத்துதல் சாதகர்களுக்கு எளிதாய் அமையும் என்பதை கருத்தில் கொள்க.

சாத்திரத்தில் சிறந்ததாம்
# திருமந்திரம்

## வழிகாட்டும் அறிவு

கற்றறிவாளர் கருதிய காலத்துக்
கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண் உண்டு
கற்றறிவாளர் கருதி உரைசெய்யும்
கற்றறி காட்டக் கயல் உள ஆகுமே.

*கல்வி அறிவாகிய பாச ஞானம் உடையோர் தியானத்தில் நின்றால், அகக்கண் திறக்கும். அந்த உயிர்உணர்வைப் பெற்று, அவர் போற்றி உரைக்கும் பதிஞானம் வழிகாட்ட அதற்கு ஏற்பவே அவர்தம் புறக்கண் காணும்.*

## கல்வி

குறிப்பு அறிந்தேன் உடல் உயிர் அது கூடிச்
செறிப்பு அறிந்தேன்; மிகு தேவர் பிரானும்
மறிப்பு அறியாது வந்து உள்ளம்புகுந்தான்
கறிப்பு அறியா மிகும் கல்வி கற்றேனே.

*உடலும் உயிரும் கூடிப் பிறவியை அமைத்த காரணத்தை அறிந்தேன். இறைவனும் என் உள்ளம் புகுந்தான். அதனால் மாசு இல்லாத கல்வி (பதிஞானம்) கற்றேன்.*

*குறிப்பு: தன்னை அறிதலும், தனக்கு ஆதாரமான தலைவனை அறிதலும், பிறவிக்கான காரணத்தை அறிதலுமே உண்மையான கல்வி.*

## உள்ளத்தில் ஒளிவிளக்கு

நிற்கின்ற போதே நிலை உடையான் கழல்
கற்கின்ற செய்ம்மின்; கழிந்து அறும் பாவங்கள்;
சொல் குன்றல் இன்றித் தொழுமின்; தொழுத பின்
மற்று ஒன்று இலாத மன விளக்கு ஆமே.

*உயிர் உள்ள பொழுதே என்றும் ஒரு தன்மையனாகிய இறைவனை அறியும் பதி ஞானத்தைப் பெறுதற்குரியனவற்றை முயல்க. உங்கள் பாவங்கள் நீங்கும். அவனை ஏத்துக. இவற்றின் பயனாக, மனம் வேறொன்றையும் சாராமல், உயிரையே சாரும். ஞானவொளியாக இறைவன் விளங்குவான். "மனத்து விளக்கது மாயா விளக்கே" என்ற ஆசிரியர் வாக்கையும் நோக்குக.*

திருச்சிற்றம்பலம்

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சர்வ வல்லப திறத்தை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது இவ்வகவல் வரிகள்**

**– தவத்திரு ஊரன் அடிகள் உரையிலிருந்து...**

அன்பு உள்ளங்களே!

கடவுளுடைய பெருமையையும், தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தல் வேண்டும் என்பார் நம் வள்ளற் பெருமான். இவ்விதமே தொன்றுதொட்டு வந்த அருட்பாக்கள் அமைந்துள்ளன. மணிவாசகர் எழுதிய சிவபுராணத்திலும் முதலில் கடவுளது புகழை நினைந்து வாழ்த்தியும் பின் தன் சிறுமையை எண்ணி வருந்தி அவர்தம் திருவடியில் விண்ணப்பித்தும் வந்துள்ளமை இதற்குச் சான்று.

அவ்விதம் கீழ்க்காணும் அகவல் வரிகள் இதற்கு முன் நமது சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், தேவர்கள், கடவுளர், அடியார்கள், யோகிகள், ஞானிகள் முதலானோர் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித்தலைமைப் பெரும் பதியாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சர்வ வல்லப தரத்தை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

**உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில**
**அயர்வர வகுத்த அருட்பெருஞ்ஜோதி**

| | | |
|---|---|---|
| உயிர்வகை அண்டம் | - | உயிர்வகைகள் வாழ்தற்குரிய அண்டங்கள் |
| உலப்பில | - | அழிவில்லாதன |
| எண்ணில | - | எண்ணற்றன |
| அயர்வுஅற | - | சோர்வு இல்லாதவாறு |
| வகுத்த | - | வகுத்தமைத்து அருளிய |
| அருட்பெருஞ்ஜோதி | - | அருட்பெருஞ்ஜோதி இறைவா. |

உயிர்வகை அண்டம் என இங்கு கூறப்பெறுவது, நாம் வாழும் நிலவுலகத்தையும், சூரிய சந்திர நட்சத்திரம் முதலான கோள்களையும் கொண்ட நமது இந்த அண்டம்தான்.

உயிர்கள் வாழ்வதற்கேற்ற அண்டம் உயிர்வகை அண்டம். அதுவும் எண்ணிக்கையில் அடங்காதன என்கிறார்.

சூரபன்மன் என்ற அசுரன் ஆயிரத்தெட்டு அண்டங்களை அரசாண்டான் என்று கந்தபுராணம் கூறும். இவ்விதம் புராணங்களும், சாத்திர நூல்களுமே கூறுகின்றன.

நம் மணிவாசகப் பெருமானும் அண்டங்கள் நூற்றொறு கோடிக்கும் மேற்பட்டன என்று கூறுகின்றார்.

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை, வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக்கு ஒன்று நின்றுஎழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன** என்பது மாணிக்க வாசக சுவாமிகளின் திருவண்டப்பகுதி முதல் நான்கு அடிகள்.

பிரமன் அண்டங்கள் - மால் அண்டங்கள் - உருத்திரன் அண்டங்கள் - ஈசுவர அண்டங்கள் - சதாசிவ அண்டங்கள் - விந்து அண்டங்கள் - நாத அண்டங்கள் - பராசத்தி அண்டங்கள் - பரசிவ அண்டங்கள் - பல்வேறு சத்தி அண்டங்கள் - பல்வேறு சத்தர் அண்டங்கள் என வரிசையாகக் கூறி இறுதியாக உயிர்வகை அண்டங்களைக் கூறி, அண்டப் பகுதியின் விரிவை நிறைவு செய்தருள்கிறார் நம் வள்ளல் பெருமான்.

பத்து வகை வெளிகள் கூறப்பெற்றன. அவ்வெளிகளில் இலங்கும் பதினான்குவகை அண்டங்கள் கூறப்பெற்றன. நவபேதங்களுக்கும் நவ அண்டங்கள். நாதத்திற்கு அதிகப்படியாக இரண்டு அண்டங்கள் ஆகப் பதினொன்று. சத்தி சத்தர் அண்டங்கள் ஆகப் பதின்மூன்று. இறுதியாக உயிர்வகை அண்டம் பதினான்காவது.

வெளிகள் இவ்வளவுதான் என்று இல்லை. இன்னும் எவ்வளவோ உள. அவற்றையெல்லாம் மற்றுள, பிறபிற என்று கூறியருள்வது பெருமானுக்கு வழக்கம்.

**கடலவை அனைத்தும் கரையின்றி நிலையுற**
**அடலனல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி**

| | |
|---|---|
| கடலவை அனைத்தும் | - கடல்கள் அனைத்தும் |
| கரையின்றி நிலையுற | - கரையில்லாமல் நிற்குமாறு |
| அடலனல் அமைத்த | - வலிமைமிக்க வெப்பத்தை அதில் அமைத்தருளிய |
| அருட்பெருஞ்ஜோதி | - அருட்பெருஞ்ஜோதி இறைவா. |

**ஆ**று, குளம், ஏரிகளுக்கெல்லாம் கரைகள் உண்டு. உயர்ந்த வலிமையான கரைகள். ஆனால் கடலுக்கு கரையே இல்லை.

கடற்கரை எனச் சொல்வதெல்லாம் கடலோர மணல் தரையே. ஏனென்றால் ஆறு, குளம், ஏரிகள் கரை கடக்கும். ஆனால் கடலோ கரையை கடப்பதில்லை. எல்லையைத் தாண்டிச் செல்வதில்லை. கரை கடக்காத இயல்பின ஆதலின் கரையும் கட்டுவதில்லை. அலைகள் எழுந்து கரையை நோக்கி வருகின்றன வந்த வேகத்திலேயே திரும்பிவிடுகின்றன. கடல் அலைகள் வெளி வரும் பின் உள்வாங்கும் எப்போதும் கரையை கடப்பதில்லை.

கடல்நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாகி மழை பொழிகிறது. அவ்விதம் ஆவியாவதால் கடல்நீர் குறைவதில்லை. எல்லா ஆறுகளும் கடலில்தான் வந்து கலக்கின்றன. அதனால் அது மிகுவதுமில்லை.

**“மழைகொளக் குறையாது, புனல் புக மிகாது,**
**கரைபொருது இரங்கும் முந்நீர் போல”**

என்ற மதுரைக் காஞ்சியில் வரும் இரண்டு அடிகள் இங்கே நினையத்தக்கன. ஆனால் ஆறு, குளங்கள் அப்படியல்ல. கோடையின் வெப்பம் தாளாது வற்றுவதும், பெருமழையால் மிகுந்து கரை தாண்டுவதும் அதன் தன்மை.

கடல் கொண்ட நகரங்கள் உண்டு. பழைய காவிரிப்பூம் பட்டினத்தை கடல் கொண்டுவிட்டது. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் பகுதியின் சிலபல பகுதிகளைக் கடல் கொண்டுவிட்டது. 2004ல் வந்த சுனாமி கடற்புயலும், 2011ல் வந்த தானே புயலும் பெருஞ்சேதத்தை விளைவித்தன எனினும் பழைய கடல்கோள் சேதங்கள் போன்று இல்லை. ஏதோவொரு காலத்தில் கடல்கோள்கள் உண்டாகின்றன என்றாலும் பொதுவாக கடல் கரைகடவாமல் கரையேதுமின்றி நின்று கொண்டுதான் உள்ளது.

இதற்கு காரணம் என்னவெனில், கடலுக்குள் ஒருவகை வெப்பம் உள்ளது. இதனை வடவைத் தீ என்றும், வடவாமுகாக்கினி என்றும் அதனைக் கூறுவர். வட கடலில் அது அதிகமாம். மேலும் அங்கங்கேயும் உண்டாம். கடலானது கரையை கடக்காதவாறு அந்த வடவைத் தீ செய்கிறதாம். இத்தீயை “அடல் அனல்” என்கிறார் நம் வள்ளல் பெருமானார். அடல் என்பதற்கு வலிமை என்று பொருள்.

இத்தகைய அடல் அனலை அமைத்து கடல்கள் கரையின்றி நிலைபெற்று இருக்குமாறு செய்த அருட்பெருங்ஜோதி இறைவனது வல்லமையை நினைத்து வியந்து புகழ்ந்து வாழ்த்தி வணங்குகின்றார் நம் வள்ளற் பெருமானார்.

திருச்சிற்றம்பலம்

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| **காலை உணவு மற்றும் GH-ல் கஞ்சுல் வார்த்தல்** | **– ரூ.2,500/–** |
| **மதிய உணவிற்கு** | **– ரூ.6,500/–** |
| **இரவு உணவிற்கு** | **– ரூ.5,000/–** |
| **பௌர்ணமி மூலிகை அன்னதானம்** | **– ரூ.11,000/–** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு)** | **– ரூ.2,500/–** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு)** | **– 15 லிட்டர்** |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

*அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை – *606 604.*

*செல்:* +91 88385 40176, +91 99427 76351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வடலூர் தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா

நிகழ்ச்சிகள்:-

**ஜனவரி 2019, 21 ம் தேதி, திங்கட்கிழமை.**

இடம்: அருட்ஜோதி அரங்க மேடை, பெருவெளி &
TRM சாந்தி திருமண மண்டபம்,
வடலூர்.

## திருவருட்பா அகவல் பாராயணம்:-

வழங்குபவர்கள்: சன்மார்க்க அன்பர்கள், திருவண்ணாமலை.

## சிறப்பு சத்சங்கம்:-

வழங்குபவர்கள்:
தயவுதிரு. கண்ணன் அடிகளார், சேலம்,
தயவுதிரு. திருமூர்த்தி அவர்கள், திருவண்ணாமலை,
தயவுதிரு. தாமல் கோ.சரவணன் அவர்கள், காஞ்சிபுரம்,
பேராசிரியை தயவுதிருமதி. விசாலாட்சி சுப்பிரமணியம் அவர்கள்,
சென்னை,
முனைவர் தயவுதிரு. கிருங்கை சோ.சேதுபதி அவர்கள், பாண்டிச்சேரி
தயவுதிரு. அருட்பா அருணாசலம் அவர்கள், பாண்டிச்சேரி
தயவுதிரு. சுந்தரபாண்டியன் அவர்கள், நாகப்பட்டினம்
தயவுதிருமதி. பிரபாவதி அம்மையார் அவர்கள், சென்னை,
கோடையிடி புலவர் தயவுதிரு. கங்கை மணிமாறன் அவர்கள்,
குத்தாலம்,
தயவுதிரு. சுப்பிரமணிய அடிகளார் அவர்கள், நல்லசேவிபுரம்,
தயவுதிரு. மு.பா.பாபு அவர்கள், சென்னை,
தயவுதிருமதி. மங்கையர்கரசி அவர்கள், உடுமலைப்பேட்டை,
தயவுதிருமதி. சசிரேகா அவர்கள், உடுமலைப்பேட்டை,

## திருவருட்பா இசைகச்சேரி:-

வழங்குபவர்கள்:
தயவுதிரு ஜீவ. சீனுவாசன் அவர்கள், திருக்கோயிலூர்,
தயவுதிரு K.தியான் செந்தில் அவர்கள், தேவனாம்பாளையம்,
தயவுதிரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள், சோமந்துரைசித்தூர்

**மஹா அன்னதானம்** **சன்மார்க்கக் கண்காட்சி**

**திருவருட்பா இலவச புத்தகம் வழங்குதல்**

தொடர்புக்கு: +91 8838540176, +91 9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly December 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



## சுத்த சன்மார்க்க சத்திய ஞானாச்சாரம்

கடவுள் சர்வ ஜீவதயாபரர். சர்வ வல்லபமுடையவர் ஆகையால் அவர், நம்மையும் சர்வ ஜீவதயவு உடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி மனித தேகத்தில் வருவித்தார்.

எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய 'அருள்' விசேஷம் விளங்குகின்றதோ அந்த ஜீவர்களிடத்தில் 'கடவுள் விளக்கம்' விசேஷயமாயிருக்கும் மற்றயர்கள் இடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக்காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் தயையும் செலுத்த வேண்டும்.

எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பத்தியாம். ஜீவகாருண்யம் உண்டானால் அன்புண்டாகும் அன்புண்டானால் அருளுண்டாகும் அருளுண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po), திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865